பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
23 02 2025 **SUNDAY** 6 30 **PM**

வணக்கம் – மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் புற்றுநோய் சிகிச்சைக்கான பராமரிப்பு மையங்கள் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் ஏற்படுத்தப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பிரதமரின் தொலைநோக்குப் பார்வை, வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைவருக்கும் உத்வேகம் அளிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 32 பேரை மீட்க உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு உடனடியாக மேற்கொள்ளுமாறு தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

4. பரந்தூர் விமான நிலைய திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தும் முயற்சிகளை தமிழக அரசு கைவிட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொண்டுள்ளது.

5. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற 242 ரன் என்ற இலக்கை பாகிஸ்தான் நிர்ணயித்துள்ளது.

**>>>>><<<<<**

நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் புற்றுநோய் சிகிச்சைக்கான பராமரிப்பு மையங்கள் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் ஏற்படுத்தப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்தியப் பிரதேசத்தின் **Chhattarpur**-ல் பாகேஷ்வர்தாம் மருத்துவ மற்றும் அறிவியல் ஆராய்ச்சி மையத்திற்கு அடிக்கல் நாட்டி அவர் பேசினார்.

இதற்கான அறிவிப்பு மத்திய பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

புற்றுநோய் சிகிச்சைக்கான மருந்துகளின் விலையை குறைப்பதற்கு வகை செய்யும் அறிவிப்புகளும் இதில் இடம்பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

30 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் புற்றுநோய்க்கான பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

தொடக்க நிலையிலேயே புற்றுநோயை கண்டறிந்தால் அதிலிருந்து எளிதாக குணமடைய முடியும் என்று கூறிய பிரதமர், இதன் அடிப்படையில் தான் இதற்கான இயக்கத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

முன்னதாக, அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் இந்தியா முன்னணியில் உள்ளதாக கூறினார்.

(சவுண்ட் பைட் - மோடி (1) 39 செகண்ட்ஸ்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அடுத்த மாதம் 8ஆம் தேதி தமது சமூகவலைதளப் பக்கங்களை நிர்வகிக்கும் பொறுப்பினை பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பெண்களிடம் வழங்கவுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மோடி (2) 70 செகண்ட்ஸ்)

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இரவு 8 மணிக்கு மீண்டும் ஒலிபரப்பாகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்

இதற்கிடையே, பிரதமரின் தொலைநோக்குப் பார்வை வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு அனைவருக்கும் உத்வேகம் அளிக்கும் என்று மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

பிரதமரின் மன்கிபாத் உரையை போபாலில் பிஜேபி நிர்வாகிகளுடன் இணைந்து கேட்ட பின்னர், சமூகவலைதளத்தில் அவர் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

>>>>><<<<<

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 32 பேரை உடனடியாக மீட்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

கச்சத்தீவு அருகே 5 படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரத்தைச் சேர்ந்த இந்த மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருப்பதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சினையில் உடனடியாக தலையிட்டு, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் திரு. மு.க.ஸ்டாலின் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலையும் இதே கோரிக்கையை வலியுறுத்தி, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாசும், இலங்கை கடற்படையின் இந்த நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண தேவையான நடவடிக்கைகளை மத்தியஅரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியா - இலங்கை மீனவர் நலனுக்கான கூட்டு பணிக்குழு கூட்டத்தை உடனடியாக கூட்ட வேண்டும் என்றும் திரு. அன்புமணி ராமதாசு அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கும் திட்டத்திற்கு இந்திய விண்வெளி ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

செவ்வாயில் தரையிறங்கி அதன் தரை பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்வது தான் இந்த திட்டத்தின் நோக்கம் என்று இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் திரு. த.வி. வெங்டேஸ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - த.வி. வெங்கடேஸ்வரன் 59 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தமிழகத்தில் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை பரிசீலித்து முடிவெடுப்பதற்கென அமைச்சர்கள் குழு ஒன்றை மாநில அரசு ஏற்படுத்தியுள்ளது.

மாநில அமைச்சர்கள் திரு. எ.வ. வேலு, திரு. தங்கம் தென்னரசு, திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருமதி. கயல்விழி செல்வராஜ் ஆகியோர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழுவினர் அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளுடன் நாளை சென்னையில் பேச்சு நடத்தவுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

திருவாரூர் மாவட்டத்தில் விவசாயம் சார்ந்த தொழிற்சாலை அமைக்கப்படும் என்று தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா கூறியுள்ளார்.

திருவாரூர் மாவட்டம், நல்லிக்கோட்டை கிராமத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அருகே தொழிற்சாலைகளை அமைத்து வேலைவாய்ப்புகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பொதுமக்கள் தாமாக முன்வந்து வழங்கும் இடங்களிலும், தரிசு நிலங்களிலும், சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

**>>>>><<<<<**

பரந்தூர் விமான நிலைய திட்டத்திற்கான நிலம் கையப்படுத்தும் முயற்சிகளை தமிழக அரசு கைவிட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. சண்முகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று காஞ்சிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விமான நிலைய திட்டம் குறித்து ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையை தமிழக அரசு வெளியிட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

**>>>>><<<<<**

மாவட்டச் செய்திகள்

கள்ளக்குறிச்சி மாவட்டம், மலையனூர் கிராமத்தில் 6 கோடி ரூபாய் செலவில் ஏரிகளுக்கான நீர்வரத்து கால்வாய்களை சீரமைப்பதற்கான பணிகளை ஆட்சியர் திரு. பிரசாந்த் தொடங்கி வைத்தார்.

**>>>>><<<<<**

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு திட்டங்களின் செயலாக்கம் குறித்த ஆய்வுக்கூட்டம், கண்காணிப்பு அலுவலர் திருமதி. சுந்தரவள்ளி தலைமையில் நடைபெற்றது.

**>>>>><<<<<**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ரயில் நிலையத்தில் ரயில் மூலம் கடத்த முயன்ற ஒரு டன் ரேசன் அரிசியை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

**>>>>><<<<<**

விளையாட்டுச் செய்திகள்

சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற 242 ரன் என்ற இலக்கை பாகிஸ்தான் நிர்ணயித்துள்ளது

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த பாகிஸ்தான் 49 புள்ளி 4 ஓவரில் 241 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக **Saud Shakeel** 62 ரன் எடுத்தார்.

குல்தீப் யாதவ் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

**>>>>><<<<<**

உகாண்டாவில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மன்ராஜ் சிங் பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரவு இறுதியாட்டத்தில் அவர், 21-10, 17-21, 21-18 என்ற செட்கணக்கில் அஜர்பைஜானின் **Dicky Dwi Pangestu-**வை வென்றார்.

**>>>>>end<<<<<**